தமிழீழ விடுதலைப் புலிகள்.

Liberation Tigers Of

TAMIL EELAM

வெளியீடு:

தமிழீழ விடுதலைப் புலிகள்
நோர்வேக்கிளை.

UTHAYAM
P.O.Box 4366
5018 NYGÅRDTANGEN
TLF.: -05-312798
BANKGIRO 5235.20.28533

# விடிவைநோக்கி..

## புலிகளின் கவிமாலை மலர்




11. NOV. 1988

புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்

www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# போராட்டத்தை ஆரம்பித்த வரலாற்று நாயகர்களுக்காக ...



லெப்டினன்ட்
சத்தியநாதன் (சங்கர்)
மலர்வு — 19-6-61
உதிர்வு — 27-11-82

தளரவே மாட்டோம்
கனவுகளின் அத்திவாரத்தில்
எங்கள் இலட்சியம் கட்டி எழுப்பப்படவில்லை
அதனால்தான் தொடர்கிறோம் மரணங்கள்
சிதறுகிறோம் சோகங்களுடன்
எங்களை தளர்ச்சியடையச் செய்யவில்லை

விடிவுதான் முடிவு
நாங்கள் கனவுகளைச் சுமக்கவில்லை
நம் இலட்சியத்தை சுமக்கின்றோம்
சுகங்களைத் தேடவில்லை
சுதந்திரத்தைத் தேடுகின்றோம்
இலட்சியத்தை சமைப்பதில்
இன்பம்தான் காண்கிறோம்
அடிமைவாழ்வுக்கு
முடிவு காண்பதில்
உறுதியாய் இருக்கின்றோம்
உண்மையாய் உழைக்கின்றோம்

யார் விலகிப் போனாலும்
நாம் விலகிப் போகோம்
எம் இலட்சியம் தமிழீழம்
அதற்காய்த்தான் நாம் உழைப்போம்

— சுதந்திரப் பறவைகள் —

"விடிவுக்காகவே உதயமானோம் நாம்" என்று வீறுப்புடனே செயற்பட்ட வீரல் வேங்கைகளே அடிமைத்தனத்தினை அறுத்து எம் மக்களை மீட்போம் என்பதில் அசையாத நம்பிக்கை கொண்டு இறுதிமூச்சு அடங்கும்வரை இலட்சியத்தை கைவிடாது செயற்பட்ட இலட்சிய வேங்கைகளே, உங்களுக்கு வீரவணக்கத்தைத் தெரிவிப்பதோடு எங்கள் கடமை முடிந்ததென்று நாங்கள் இருந்து விடமாட்டோம். 'தூய இலட்சியம் தோல்வியைத் தழுவாதில்லை.'



வீரமரணமடைந்த
சுதந்திரப்பறவை சபரி.




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தமிழீழ விடுதலைப் புலிகள்
# Liberation Tigers of Tamil Eelam

தமிழீழ மக்களின் [illegible] இலட்சிய நோக்காகக் கொண்ட பேர்கன்-தமிழ் அமைப்பு "உதயம்" ஆகி 5 ஆண்டுகளையும் கடந்துவிட்டது. அதன் ஆக்கபூர்வமான செயற்பாட்டுக் 'கதிர்கள்' எமது மக்களின் இருள் தோய்ந்த விடுதலைப்பாதையில் ஒளி சேர்த்து வருகின்றன.
"**விடிவை நோக்கி**"ய இப்புலிகளின் கலைமாலை இத்தருணத்திற்குப் பொருத்தமான கலைக்கதிராக மிளிர்கின்றது.

தேசிய விடுதலை என்பது தமது மண்ணில் ஒரு மக்களினம் அடைகின்ற தன்னிறைவையே குறித்து நிற்கின்றது. அரசியல் விடுதலை மட்டுமல்ல பொருளாதார-சுதந்திரம், ஏற்றத் தாழ்வகன்ற சமூக மாற்றம், சுபீட்சவாழ்வு, கலாச்சார மேம்பாடு ஆகியனவும் தேசிய விடுதலையின் பல்வேறு அம்சங்களாக உள்ளன.

கலையானது மக்கள் சமுதாயத்தை ஆதாரமாகக் கொண்டு எழுகின்றது. எனவே கலை, கலைக்காகவே என்றில்லாது தமிழ்ச் சமுதாய விடுதலைக்கான கருவியாகவும் பயன்பட வேண்டும். ஒரு மக்களினத்தைப் பூண்டோடு அழிக்கவேண்டும் என்றால் அம்மக்களினத்தின் கலாச்சாரத்தை முதலில் அழிக்கவேண்டும் என்ற நோக்கோடு சிங்களப் பேரினவாதமும், இந்திய ஏகாதிபத்தியமும் செயற்படும் போது எமது கலை, கலாச்சாரத்தைப் பேணுதல், வளர்த்தல் என்பதோடு நாம் நின்றுவிடலாகாது. அவை தேசிய அடக்குமுறையை சித்தரிக்கும் நெருப்பாகவும் மாற்றப்படவேண்டும்.



தேசிய கலை, கலாச்சாரம் தேக்கமடையாது வளர்ச்சியுற வேண்டுமெனில், அவை எமது மண்ணின் கலாச்சாரப் பாரம்பரியத்தில் ஊன்றி நின்றால் மட்டும் போதாது. சமூக முன்னேற்றத்திற்குத் தடையான பழைய கலாச்சார மரபுகளைத் தூக்கி எறியவும், சர்வதேச கலாச்சார அம்சங்களை உள்வாங்கி செழிப்புறவும் வேண்டும்.
இவ்வகையில் வெளிநாடுகளில் வாழுகின்ற தமிழ்மக்கள்; "உதயம்" போன்ற தமிழ் அமைப்புக்கள்; தாமிருக்கும் நாடுகளில் சிறப்பான கலை, கலாச்சார அம்சங்களை உட்கவர்ந்து, தமிழ்க் கலாச்சாரப் பண்புகளை செறியச் செய்து, தமிழ்ச் சமுதாயத்தின் வளர்ச்சிக்கு உதவ வேண்டும். இவ்வாறான சர்வதேச கலாச்சாரச் சங்கமிப்பின் மூலம் தான் தமிழ்த் தேசிய இனத்தின் கலைவெளிப்பாடாகிய அழகியல் உணர்வுகள் மேம்பாடுபட்டதாகவும், சர்வதேசத்தரமுடையனவாகவும் விளங்கும்.

கலை, கலாச்சார வளர்ச்சியுடன் இணைந்த எமது விடுதலைப்போரில் இலங்கை-, இந்திய-ஆதிக்க இராணுவங்களை எதிர்த்து எமது மக்கள் வீரமுடன் போராடிவருகின்றார்கள். இப்போராட்டத்தை முன்னெடுக்கும் தமிழீழ விடுதலைப்புலிகளின் போர்முயற்சிகளுக்கும், தமிழீழ நிர்மாணத்திற்குமான ஆயத்த தேவைகளுக்கும் பேர்கன் வாழ் தமிழ் மக்கள் தங்கள் பூரண பங்களிப்பை வழங்குவார்கள் என்று எதிர்பார்க்கிறேன்.

மேலே குறிப்பிட்ட நோக்குகளை அடிப்படையாகக் கொண்டு "உதயமும்", பேர்கன் வாழ் தமிழ்மக்களும் அரங்கேற்றும் இக்கலைவிழா சிறப்புடன் நடந்தேற எமது இயக்கத்தினதும், தலைவர் வே. பிரபாகரனினதும் சார்பில் எனது வாழ்த்துக்களையும், மனமகிழ்வினையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

-லோ. திலகர்.

மத்திய குழு உறுப்பினர்,
தமிழீழ விடுதலைப் புலிகள்,
11.11.1988.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# நாமும் வாழ்த்துகிறோம்

- ஈழம் சுதந்திரம் பெற்று ஜனநாயக வழியில் நிர்வகிக்கப்பட வேண்டும்! தமிழீழம் தன்வலி ஆற்றல் மூலம் தழைத்தோங்க அதை நாமும் போற்ற வேண்டும் -

என்ற எண்ணத்தைக் கொண்டு, வீரமே அணியாகவும் தியாகமே ஆரமாகவும் கொண்ட மகத்தான வீர இளைஞர்களைக் கொண்ட புலிப்படையின் புகழுக்கு ஒளி கூட்ட 'உதயம்' எடுக்கும் சிறப்புமாவீரர் விழா நோர்வே வாழ் தமிழினத்தைத் தட்டி எழுப்பும் நன்விழாவாக அமைந்திடும் என்பதில் ஐயமில்லை.

எந்நாட்டில் வாழ்ந்தாலும் நம் தாய்நாட்டின் விடுதலைக்குப் போர் தொடுக்கும் புலிகள், பொன்னாட்டை மீட்கும் புகழோடு வாழப் பண்பாடுவோம்.

கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தே முன் தோன்றிய மூத்த தமிழ்க்குடியில் பிறந்த தமிழ்மகனுக்கு இன்று மூச்சுவிடக்கூட சொந்தமண்ணில் இடமின்றி அடிமைகளாக வாழ்தல் நன்றோ? இதை மாற்றப் புறப்பட்ட புலிகள் விரைந்து தமிழீழம் பெற்றிட நாமும் வாழ்த்துவோமே.

| | | |
|---|---|---|
| * தமிழீழ விடுதலைப் புலிகள் - ஜேர்மன் கிளை | | |
| - பிரான்ஸ் கிளை | | |
| - சுவிஸ் கிளை | | |
| - பிரித்தானியக் கிளை | | |
| * தமிழர் நலன்புரி மன்றம் - ஒஸ்லோ | } நோர்வே | |
| - துரொண்ணியம் | | |
| - டென்மார்க் | | |
| * தமிழர் ஒருங்கிணைப்புக் குழு - அவுஸ்திரேலியா | | |
| - நெதர்லாந்து | | |
| * உலகத்தமிழர் இயக்கம் - கனடா | | |



# காந்தியின் மைந்தர்கள்...

இலங்கையின் இனப்பிரச்சனையில் மத்தியஸ்தம் வகிக்கும் பொறுப்பினை ஏற்றுக்கொண்ட இந்தியா, இன்று தமிழீழ மக்கள் மீதும் தமிழ் பேசும் மக்களின் பிரதிநிதிகளான விடுதலைப் புலிகள் மீதும் ஒரு அநாகரீகமான யுத்தத்தினைத் தொடுத்துள்ளது. தமிழ் மக்களின் பிரச்சனையைத் தீர்க்காத ஒரு ஒப்பந்தத்தினை அமுல்படுத்துவதில் வரிந்து கட்டி நின்று எமது மண்ணைப் பிணமேடாக்கியுள்ளது.

எமது பிரச்சனையில் இந்தியாவின் அணுகுமுறை எவ்வாறு இருந்தது?

எமது பிரச்சனையைத் தீர்க்காத ஒரு ஒப்பந்தத்தை இலங்கை அரசுடன் செய்ய இந்தியா முன்வந்தமையின் காரணம் என்ன?

இன்று இந்தியாவின் செயற்பாடுகள் எத்தகையன?

இந்தியாவின் ஆணைக்குட்பட்ட ஒரு பிரதேசமாக இலங்கை இருக்கவேண்டும் என்பதே இலங்கை குறித்து இந்தியாவின் முடிவாக இருக்கின்றது. இந்தியாவின் பாதுகாப்பு, இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் குறிப்பாகத் தென்னாசியாவில் இந்தியாவின் முதன்மையை நிலைநிறுத்துதல் ஆகியன இந்தியாவின் இம்முடிவுக்குக் காரணங்களாக அமைகின்றன.

1977ம் ஆண்டு இலங்கைத் தீவில் ஆட்சிப் பொறுப்பேற்ற ஐ.தே.க. தனது ஆட்சிக் காலத்தில் இந்தியாவுக்கு கவலையளிக்கக்கூடிய வகையில் இந்தியாவுக்கு எதிரான வெளியுறவுக் கொள்கையினை நடைமுறைப்படுத்தி வந்தமையினால், இலங்கையின் தனது ஆணைக்கு உட்படுத்த இனப்பிரச்சனையைப் பயன்படுத்துவது என்னும் ஒரு அடிப்படை முடிவை இந்தியா மேற்கொண்டது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இதன் அடிப்படையில், 1983ம் ஆண்டு நடைபெற்ற தமிழர்களுக்கு எதிரான இனக் கலவரத்தைத் தொடர்ந்து இலங்கையின் இனப்பிரச்சினையில் இந்தியா தன்னை ஈடுபடுத்திக்கொண்டது. சிறீலங்கா அரசுக்கு நெருக்கடிகளை ஏற்படுத்த தமிழ் இயக்கங்களுக்கு ஆயுதப் பயிற்சியினை வழங்கிய அதே வேளை, பேச்சு வார்த்தைகளையும் சிறீலங்கா அரசுடன் நடாத்தி வந்தது இந்திய அரசு. போராளிகளின் தாக்குதல்களால் நிலைகுலையும் சிறீலங்கா அரசு, பேச்சுவார்த்தைகளினூடு தன்னிடம் சரணடையும் போது, சிறீலங்கா அரசுடன் ஒரு சமரசம் செய்து கொள்ளல் என்பது இந்தியாவின் அடிப்படைத் திட்டமாக இருந்தது. ஆனால் சிறீலங்கா அரசோ இந்தியாவிடம் சரண் அடையவில்லை. தமிழீழப் போராட்டத்தால் நிலைகுலைந்து வந்த சிறீலங்கா அரசு தனது மேற்குலக ஆதரவுக்குரிய அமெரிக்காவின் துணையுடன் இஸ்ரேல், சீன, பாகிஸ்தான், தென்னாபிரிக்கா, பிரித்தானியா (SAS கூலிப்படை) ஆகிய நாடுகளின் உதவியுடன் தமிழ் மக்கள் மீது கோரயுத்தத்தைத் தொடர்ந்தது. இது இந்தியாவுக்கு நெருக்கடிகளைத் தோற்றுவித்தது.



இந்தியாவின் பாதுகாப்புக்கு எதிரான சக்திகள் இலங்கையில் நிலைகொண்டமை தொடர்பாகவும் இலங்கையில் தமிழ் மக்கள் கொல்லப்படுவதைத் தடுத்து நிறுத்துமாறும் இந்திய மக்களால் குறிப்பாகத் தமிழ்நாட்டு மக்களால் இந்திய அரசுக்கு வழங்கப்பட்ட அழுத்தம் தொடர்பாகவும் சில நடவடிக்கைகளை எடுக்க வேண்டிய தேவை இந்திய அரசிற்கு இருந்தது. இவற்றினூடும் தமிழ் நாட்டின் அரசியல் நலன்களுக்காகவும் சிறீலங்கா அரசிற்கு இந்தியா நிர்ப்பந்தங்களைக் கொண்டுவந்தது.

மக்கள் கொல்லப்படுவது நிறுத்தப்பட வேண்டுமெனவும் பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு அல்ல, அரசியல் ரீதியிலேயே தீர்வு காணப்பட வேண்டும் எனவும் இந்தியா அடிக்கடி சிறீலங்கா அரசினை வற்புறுத்தத் தொடங்கியது. இதற்காகப் பேச்சுவார்த்தைகளை ஒழுங்கு செய்யவும் இவற்றிற்கு மத்தியஸ்தம் வகிக்கவும் இந்தியா முன்வந்தது.

ஆனால் சிறீலங்கா அரசினையும் போராளிகளையும் ஒரு கோட்டில் கொண்டுவர இந்தியா எடுத்த பல முயற்சிகள் தோல்வியைத் தழுவின. தமிழர்களுக்கு எந்த உரிமையையும் கொடுப்பதற்கு எதிரான நிலைப்பாட்டினைத் தன்னகத்தே கொண்ட சிறீலங்கா அரசு ஒரு புறம்; தமிழீழமே தமிழ் பேசும் மக்களின் பிரச்சினைக்கான தீர்வு என்பதில் உறுதியான நம்பிக்கை கொண்ட போராளிகள் குறிப்பாக விடுதலைப்புலிகள் மறுபுறம். இரு தரப்பும் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு தீர்வினை முன்வைக்க இந்திய அரசால் முடியவில்லை.

உண்மையில் பேச்சுவார்த்தைகளால் தீர்க்கமுடியாத அளவுக்கு ஒரு தர்க்கரீதியான வளர்ச்சியினை இலங்கையின் இனப்பிரச்சினை அடைந்திருந்தது. குறைந்த பட்சம் சமஷ்டி அமைப்பில் கூட தீர்ப்பது சாத்தியமற்ற அளவுக்கு வளர்ச்சியடைந்த ஒரு பிரச்சினையினை ஒற்றையாட்சி அமைப்புக்குட்பட்ட வகையில் பேசித்தீர்ப்பது என்பது ஒரு சாத்தியமற்ற முயற்சியே.

இலங்கைத்தீவில் தமிழீழம் எனும் ஒரு நாடு உருவாகுவதனையும் இந்தியா விரும்பவில்லை. சிறீலங்கா, தமிழீழம் என இரு நாடுகள் இலங்கையில் அமையுமானால் சிறீலங்கா நிரந்தர எதிர்ப்பு நாடாக மாறி அதில் இந்தியாவின் பாதுகாப்புக்கு முரணான சக்திகள் நிலைகொண்டுவிடும் என்ற அச்சமும் தமிழீழம் ஒரு சோஷலிச நாடாக அமையும் பட்சத்தில் தமிழ்நாட்டிலும் தென்னாசியாவிலும் சோஷலிசக் கருத்துகளுடன் ஆயுதப் போராட்டமும் வளர்ச்சியடைந்துவிடலாம் என்ற பீதியுமே இந்தியாவின் இம்முடிவுக் காரணங்களாக அமைகின்றன.

எமது போராட்டத்தின் வளர்ச்சிப் போக்கில், சமரசமுயற்சிகளின் போது சிறீலங்கா அரசுடனும் போராளிகளுடனும் முரண்பட வேண்டிய நிலை பல சந்தர்



www.tamilarangam.net

ப்பங்களில் இந்தியாவுக்கு ஏற்பட்டது. பிரச்சனையின் தார்க்கீகரீதியான வளர்ச்சிப் போக்கினை நிராகரித்துச் செயற்பட முனைந்தமையால் ஏற்பட்டதே இம்முரண்பாடுகள். அரசியல் ரீதியான தீர்வு என்ற இந்தியாவின் திட்டத்திற்கு மாறாக இராணுவத்தீர்வு என்பதனை நடைமுறைப்படுத்த சிறிலங்கா அரசு முயன்ற போது இருநாடுகளுக்கு மிடையே முறுகல் தோன்றியது.


இந்நிலையில் வடமாராட்சி இராணுவநடவடிக்கை, இதில் இந்தியாவின் நேரடி நடவடிக்கை ஆகியவற்றைத்தொடர்ந்து சில உட்பேச்சுவார்த்தைகளின் பின் சிறிலங்கா, இந்திய ஆளும்வர்க்கங்கள் தங்கள் சுய நலன்களைப் பேணிக்கொள்வதற்காக இலங்கை - இந்திய ஒப்பந்தத்தை கைச்சாத்திட்டன. இந்த ஒப்பந்தம் மூலம், தனது பாதுகாப்புக்கெதிரான சக்திகளைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து இலங்கையினை தனது ஆளுமைக்குட்பட்ட ஒரு நாடாக ஆக்கி தென்னாசியாவில் தனது மேலாண்மையினை நிலைநிறுத்துவதில் இந்தியா வெற்றிபெற்றது. இலங்கைத்தீவினை தனது ஆளுமைக்குட்படுத்துவதனையே முதன்மை நோக்கமாகக் கொண்டு இலங்கையின் இனப்பிரச்சினையில் தலையிட்ட இந்தியா, தனது நோக்கம் நிறைவேறியதுடன் எந்த மக்களின் இரத்தத்தினையும் தியாகத்தினையும் பயன்படுத்தி தனது நோக்கத்தை நிறைவேற்றியதோ அந்த மக்களுக்குத் துரோகத்தை இழைத்தது மட்டுமன்றி அவர்களை ஒடுக்கும் பொறுப்பினையும் சிறிலங்கா அரசிடமிருந்து எடுத்துக்கொண்டது. இந்திய அரசின் இந்தத் துரோகச்செயல் வரலாறு உள்ளவரை இந்திய தேசத்திற்கும் இந்திய மக்களுக்கும் தீராத களங்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

தமிழீழமே பிரச்சனைக்குத்தீர்வு என்ற முடிவுடன் போராடிவந்த விடுதலைப்புலிகளிடம் அவர்கள் திம்புவில் முன்வைத்த கோரிக்கைகளில் ஒன்றைக்கூடப்பூர்த்தி செய்யாத இந்த ஒப்பந்தம் திணிக்கப்பட்டது. இவ்வொப்பந்தம் தமிழ் பேசும் மக்களின் பிரச்சினையை எந்த விதத்திலும் தீர்க்காத போதிலும் இந்திய ராணுவத்துடன் மோதலைத்தவிர்க்க விரும்பி ஒப்பந்தத்துடன் இணைந்து செல்ல விடுதலைப்புலிகள் பணிக்கப்பட்டனர். தமிழ் பேசும் மக்களின் நலன்களைக் குறைந்த பட்சமாவது பேணுவதில் இந்திய அரசு அக்கறை கொள்ளாமையினால் இந்திய அரசுடன் முரண்பட வேண்டிய நிலை விடுதலைப்புலிகளுக்கு ஏற்பட்டது. இம்முரண்பாடுகள் மோதலாக மாறுகின்ற அளவுக்கு நிலைமைகள் சீர்கெட்டன.

விடுதலைப்புலிகளுக்கும், இந்திய ராணுவத்திற்கும் இடையில் மோதல் ஏற்பட்ட பின்னர் இந்திய இராணுவம் நடந்துகொண்ட விதம் மிகவும் மூர்க்கத்தனமானது. சிறிலங்கா இராணுவத்தின் கொடுமைக்குக்கூட சவால்விடக்கூடியது. எந்த மக்களைப் பாதுகாக்க வந்ததாகக் கூறிக்கொண்டதோ அந்த மக்களை இரத்தவெள்ளத்தில் மிதித்தது இந்திய ராணுவம். மக்கள் வரலாற்றில் அனுபவித்திராத கொடுமைகளை அனுபவித்தனர். வெள்ளைக்கொடி ஏந்தி வந்த 'காந்தியின் மைந்தர்கள்', தங்கள் வீடுகளிலும், வீதிகளிலும் கரும்புகைக்கொடிகள் பறப்பதற்கு காரணமாக அமைவார்கள் என எதிர்பார்த்திராத மக்கள் இந்த நம்பிக்கைத்துரோகத்தை சீரணிக்க முடியாது தவித்தனர்.

இந்தக் கொடூரமான இராணுவ நடவடிக்கை மூலம் போராளிகளின் முதுகெலும்பை உடைத்து மக்களின் மனோபலத்தைச் சிதைத்து ஒப்பந்தத்தை தமிழீழ மண்ணில் நிலைநிறுத்துவதே இந்தியாவின் நோக்கமாக இருந்தது. ஆனால் போராளிகளை இந்தியாவினால் இலகுவாக வெற்றி கொள்ளமுடியவில்லை. மூன்று நாட்களில் போராளிகளைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து விடலாம் என்று திட்டமிட்டு இருந்த இந்திய இராணுவத்தால் இன்று ஒரு வருடத்திற்கு மேலாகியும் அம்முயற்சியில் வெற்றி பெறவில்லை.

இந்நிலையில், இலங்கையில் அமைதியினை ஏற்படுத்திவிட்டதாக ஒரு மாயையினை ஏற்படுத்தும் முயற்சியில் இந்திய அரசு இறங்கியுள்ளது. அம்முயற்சியின் வெளிப்பாடே வடக்கு, கிழக்கு மாகாணசபைகளுக்கு ஒரு ஏமாற்றுத்தேர்தல் 'கைக்கூலிகளின்' உதவியுடன் நடாத்துவதற்கு நடக்கும் ஏற்பாடு. இதன் மூலம் சர்வதேச அரங்கில் தாம் இலங்கையின் இனப்பிரச்சினையைத் தீர்த்து அமைதியினை ஏற்படுத்திவிட்டதாக ஓர் எண்ணத்தை ஏற்படுத்த இந்தியா பகீரதப் பிரயத்தனம் செய்து வருகின்றது. இந்தத் தேர்தல் அமைதியினை ஏற்படுத்துவதற்குப் பதிலாக தமிழீழப்பகுதிகளில் மேலும் இரத்தாறுகள் பெருகவே வழிவகுக்கும்.



எதிர்வரும் தேர்தலை கார்த்திகை 19ல் (1988) நடத்த சிறிலங்கா அரசு தீர்மானித்துள்ளது. இதுபற்றி விடுதலைப்புலிகள் பின்வருமாறு கருத்துத் தெரிவித்துள்ளனர். "... ஈழத்தமிழர்களின் தேசியவிடுதலைப் போராட்டத்தை நசுக்கி, தமிழ்க் குழந்தையை கருவிலே சிதைத்துவிடும் நோக்கத்துடன் இந்த தேர்தல் நாடகம் அரங்கேற்றப்படுகின்றது. இது இலங்கை, இந்திய அரசுகளின் கூட்டான சதியாகும். ராஜீவ் - ஜே. ஆரின் அடிமைச்சாசனத்தை ஏற்று தேர்தலில் குதிக்கவுள்ள சகோதர கொலைப்படைகளை துரோகிகள் என வர்ணித்துள்ள விடுதலைப்புலிகள் இவர்கள் மன்னிக்கப்படமாட்டார்கள் எனவும், இவர்களின் நிலை குறித்து ஈழமக்கள் விழிப்பாக இருக்க வேண்டும்..."

www.tamilarangam.net


இத்தேர்தலில் EPRLF (பத்மநாபா-குழு), TELO (செல்வம்-குழு), ENDLF (இராஜன்-குழு), DILF (PLOTன் மாறுவேடம்-சித்தார்த்தா-குழு), TULF (அமிர்-குழு) என்பவற்றுடன் ஆளும் ஐ.தே.க.யும் சில கொழும்பு முஸ்லீம் அமைப்புகளும் போட்டியிடத் துடித்தெழுந்தனர். எனினும் இந்தியாவின் உதவியுடன் இக்குழுக்கள் தமக்குள் செய்து கொண்ட உடன்பாட்டின்படி வடக்கில் இக்குழுக்கள் ஒரு போட்டியற்ற பட்டியலைக் கொடுத்தன. கிழக்கில் இக்குழுக்களுடன் ஐ.தே.க. போட்டியிடத் தீர்மானித்துள்ளது. நாம் 'பயம்' காரணமாகப் போட்டியிடவில்லையென TULF அறிவித்துள்ளது.

"... இராணுவ வலயத்திலுள் (1 லட்சத்திற்கும் மேற்பட்ட இராணுவம்), இராணுவ பக்க பலத்துடன், துப்பாக்கி முனையில் நடாத்தப்படும் தேர்தல்கள் பொய்யானவை (ஐ.நா. சபையின் மனித உரிமைகளுக்கான சர்வதேச பிரகடனம் - 10.12.1949.). மேலும் தமிழ் பேசும் மக்களின் அடிப்படையான சுதந்திரத்தை (பாதுகாப்பு, சமூக-பொருளாதார வளர்ச்சி, கலாச்சார மேம்பாடு உட்பட) உறுதிப்படுத்தாத ஒப்பந்தத்தின் கீழ் இடம்பெறும் தேர்தல்களில் போட்டியிடுவதும் தமிழ்மக்களுக்குச் செய்யும் மாபெரும் துரோகமாகும்...."

பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு இதயசுத்தியுடன் செயற்படாமல், பிரச்சினை தீர்க்கப்பட்டு விட்டதாக ஒரு மாயையினை உருவாக்குவதனால் எத்தகைய விரும்பத்தக்க விளைவும் ஏற்படப்போவதில்லை. இந்த உண்மையினை இந்தியா உணர்ந்துகொள்ளவேண்டும். தற்காலிக பாதுகாப்புகளுக்காக சுதந்திரத்தை விட்டுக்கொடுக்க போராளிகளும், தமிழ்பேசும் மக்களும் தயாராக இல்லை என்பதனை இந்திய அரசு புரிந்துகொள்ள வேண்டும். எமது தியாகத்தினையும் அர்ப்பணிப்பையும் மதித்து எமது உரிமைகளை வென்றெடுக்க, ஒத்துழைப்பு நல்கவேண்டும். அதுவரையில் நாம் எமது உரிமைகளுக்காகவும், சுதந்திரத்திற்காகவும் இந்தியாவுடன் மோதுவதும் தவிர்க்கமுடியாததே.

ஆம்!
நண்பனே நீ
என் அயல் வீட்டுக்காரன் தான்,
எனினும்,
எனது முற்றத்தில்,
என் மூதாதையர் ஓடி, விளையாடி,
கூடிக் களித்த
இந்த முற்றத்தில்
நீ கூடாரமடித்து குடிபுக
விடமாட்டேன்.

எனது மொழி,
எனது பண்பாடு,
எனது கலாச்சாரம் தனித்துவமானவை.
நண்பனே, நான் ஒரு தனித்தேசிய இனத்தவன்.



விடுதலைப்புலிகளின் தியாகமும், வீரமும், சாவுக்கு அஞ்சாத துணிவும் இந்திய இராணுவத்தின் மனஉறுதியை உடைத்துள்ளது. புலிகளை சுலபமாக அழித்துவிட முடியாது என்பதையும் அவர்கள் இந்திய அரசிற்கு உணர்த்தியுள்ளார்கள். இந்திய வல்லரசின் அடக்குமுறைக்கு எதிராக விடுதலைப்புலிகள் நடாத்திவரும் கெரில்லா யுத்தமும் எமது தேசிய விடுதலைப் போராட்டத்தினைப் பொறுத்தவரை பல்வேறு அனுகூலங்களைப் பெற்றுத்தந்துள்ளது.

எமது மக்களின் நலன்களைப் பேணுவதற்கும், எமது மக்களின் சுதந்திரத்தையும், கௌரவத்தையும் காப்பாற்றுவதற்கும், எமது விடுதலை இலட்சியத்தை முன்னெடுத்துச் செல்லவும் போராட்டம் தவிர்க்க முடியாததொன்றாகும்.

பல்வேறு முக்கிய தேவைகளுடன், அடர்ந்த காடுகளில், மிகவும் ஆபத்தான சூழ்நிலையில் ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட இராணுவத்துடன் விடுதலைப்புலிகள் போராடி வருகின்றார்கள். எமது மக்களின் அபிலாசைகளை வென்றெடுக்க, எமது சுதந்திர போராட்டத்தை முன்னெடுத்துச் செல்ல உறுதியுடன் போராடும் விடுதலைப்புலிகளின் கரங்களைப் பலப்படுத்துவது வெளிநாட்டில் வாழுகின்ற ஒவ்வொரு தமிழ்மகனினதும் வரலாற்றுக் கடமையாகும்.

**'தற்காலிகப் பாதுகாப்பிற்காக சுதந்திரத்தை விட்டுக் கொடுக்கும் எந்த இனமும் இறுதியில் சுதந்திரத்தையும் அனுபவிப்பதில்லை; பாதுகாப்பையும் அனுபவிப்பதில்லை.'** ▲



www.tamilarangam.net



யாகப்பயணம்
தொடங்கும்
கெஞ்சமாட்டேடம்
எனை
ஆளநினைத்தாய்
நீதான்...
புதிய உலகுக்காய்
புறப்பாடு செய்து
புரட்சி மறவர்க்கு
பயிற்சிப் பாசறைகள்
நிர்மாணித்தாய்
நெருப்புப்பூக்களுக்கு
விதை போட்டவனே!
எங்கள் இரத்தத்தால்
உன்பயிரை வளர்க்கிறோம்
பாலைவனப் பசுந்தரையிலே
நீ எதிர்பார்த்த
அக்கினிப்புஷ்பங்கள்
நாளை மலரும்
நாளை மலரும்.

---

எம் மக்களின், வீரர்களின்
இறந்த உடல்கள் மீதும்
சாம்பல் மேடுகளின் மீதும்
ஏறி நின்று
உயர்த்திய கரங்களில்
துப்பாக்கி ஏந்தியபடி
ஓங்கிய குரல்கள்
விண்ணதிர ஒலிக்க
உனது முகத்திலறைந்து
கூறுகின்றோம்
"இந்த எமக்கொரு
வாழ்வுண்டு; எங்கள்
இருப்பை அங்கீகரிக்க
மறுக்கும் எல்லோர்க்கும்
நாங்கள் எதிரிகளே!"
உனது இரத்தமொழுகும்
கரங்கள்
வாழ்வுக்காக மரணிப்பதை
தவிர
வேறெதனையும்
எமக்கு உணர்த்தவில்லை.

---

### யாழ்பாடி

தமிழ் கவி தாவி காதினிலே கேட்கும்
தமிழ் மண்ணின் வாசனை மணக்கும்
பொம்பர் தினம் வட்டமிட
பங்கருக்குள் ஒரும் வாழ்க்கைச் சக்கரமும் நடக்கும்
கேளிக்கை கூத்தும் நடக்கும்
இந்த இதைப் பார்த்த சில மனங்களோ பொங்கிஎழும்
விடுதலைப் புலிகளிந்த தினம் தினம் சென்றியில் நிற்கும் சிவராத்திரி
இதை அறியா சில மாந்தர் நக்கல் பேச்சும் நையாண்டியும்


சாலையில் சென்றவர் திடீரென சரிந்தார்
பஸ்சில் பள்ளிசென்ற பாலகன் வரும்போது பாடையில் வந்தான்
சோற்றுப் பானையைத் திறந்தேன் அதற்குள் ஒரு குண்டு
தேங்காயை உடைத்தேன் அதற்குள்ளும் ஒரு குண்டு
இவ்வாறு இங்கே பல மந்திரஜாலங்கள் நடக்கும்
கோட்டையிலே சில குரங்குகள் இருக்கின்றன
அதுகள் கையில் கொடுத்ததெல்லாம் குரங்கின் கைப்பூமாலை
புலிகள் கையில் கொடுத்ததெல்லாம் பூசைக்கு ஏற்ற பூமாலை

புலிகள் பல பயன்தரும் விதைகளை விதைத்துவிட்டார்கள்
அதுதான் விக்ரர், கேடில்ஸ், ராதா, பொன்னம்மான், திலீபன்
என நீண்டு கொண்டே போகின்றது.
இவைகளின் பயன் எப்போதாவது ஒரு நாள் கிடைக்கும்
அதுதான் புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்
இதுதான் யாழ்பாடி பரிசாகப் பெற்ற
யாழ்பாணத்தின் இன்றைய நிலை.

---

"சென்று வா, வீரனே!
உன் நெஞ்சு கனத்திருக்கிறது
என்பதை நானறிவேன்.
இடிந்து கிடக்கும் உன் சுவர்களை நோக்கி
இனியும் அந்த நாய்கள் ஓடிவரப் போவதில்லை.
உன் உயிரைக் கேட்டார்கள்.
உன் ஒரேயொரு சொத்து அது
அதைக்கூட உன்னிடமிருந்து பறித்துவிட்டார்கள்."

(பலஸ்தீனப் பாடல் ஒன்றிலிருந்து)





## நிகழ்ச்சி நிரல்

- அஞ்சலி.... சிறுவர் நடனம்
- வரவேற்புரை
- சிறப்புரை
- பாசறை நடனம்
- "நாமார்க்கும் குடியல்லோம்"
  -நாடகம் (ஜேர்மனி தமிழர் நலன்புரி மன்றம்)

~ இடைவேளை ~

- விடுதலை கீதங்கள்
- புத்தக வெளியீடு
- "விடியலுக்கு இல்லை தூரம்"
  நாடகம் (உதயம்)

www.tamilarangam.net

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்


www.tamilarangam.net

# தீர்க்கதிருஷ்டி

தமிழீழப் புரட்சிகர ஆயுதப் போராட்டத்தின் வரலாறு, விடுதலைப்புலிகளின் வரலாறு தான். புரட்சிகர தமிழ் இளைஞர்கள் மத்தியிலிருந்து இந்த ஆயுதப் புரட்சிகர இயக்கம் கருக்கொண்டது. இந்த இயக்கத்தின் தலைவரும் இராணுவத் தளபதியுமான வேலுப்பிள்ளை பிரபாகரன் ஆரம்பத்திலிருந்தே தமிழீழம் எனும் இலட்சியபாதையில், அரசியல் தெளிவுடன், அமையப்போகும் தமிழீழம் பற்றியும், அதனை அடைவதற்கு ஆகவேண்டிய வழிமுறைகள் பற்றியும் தெட்டத்தெளிவாகக் கூறியிருந்தார். அன்றைய அவரின் கருத்துக்கள் இன்றைய தமிழீழத்தின் நிலைப்பாடுகளுடன் சரியாகப் பொருந்துகின்றன. அவற்றில் சிலவற்றை இங்கு நாம் எடுத்துக்காட்ட விரும்புகின்றோம்.

"...நாம் பயங்கரவாதிகளுமல்ல, பலாத்காரத்தில் பற்றுடையவர்களுமல்ல. வன்முறையை மென்முறையால் வென்று கொள்ள முடியாது என்பதை உணர்ந்து கொண்டதால் தான் நாம் வன்முறைப் போராட்டத்தைத் தழுவிக் கொண்டோம். நாம் ஆயுதத்தை ஏந்தியது அரசியல் இலக்கைக் காக்கவேயன்றி வேறொன்றிற்காகவுமல்ல.

... நாம் போராட்ட காலத்தில் இரத்தம் சிந்தியபோது எமது இளம் வீரர்கள் உயிர்த்தியாகங்கள் புரிந்து வந்த போது, தமிழ் இனம் நரகம் தாங்கொணா ஒடுக்குமுறைக்கு இலக்காகிய போது போராட்டத்தை முன்னெடுத்துச் செல்வதற்கு கூட்டணித் தலைவர்கள் எதையும் உருப்படியாகச் செய்யவில்லை. இவர்கள் செய்ததெல்லாம் எமது ஆயுதப்போராட்டத்தை ஒரு அரசியல் அழுத்தமாகப் பிரயோகித்து சலுகைகள் வேண்டி சிங்கள அரசுடன் சமரசப் பேச்சுக்களை நடாத்தி வந்தனர்...



இந்தியா பற்றி:

... எமது கொள்கைகளைத் தெட்டத்தெளிவாக எடுத்துக்கூறி இந்தியாவின் நல்லாதரவைப் பெறுவதை விட்டு எமது பிரச்சினையைத் தீர்த்து வைக்குமாறு இந்தியாவிடம் கையேந்தி நிற்பது அரசியல் சாமர்த்தியமாகாது...

சக இயக்கங்களின் கூட்டுறவு பற்றி:

... ஒற்றுமையானது தமிழீழப் புரட்சி இயக்கத்திற்கு அப்பாற்பட்ட அந்நிய சக்திகளின் அழுத்தங்கள் காரணமாகவோ அன்றேல் பிற்போக்கு சந்தர்ப்பவாத அரசியல் வாதிகளின் நெருக்குதல் காரணமாகவோ அவசரப்பட்டுச் சமைத்த சாம்பாறு ஒற்றுமையாக அமைவதை நாம் விரும்பவில்லை ....






தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

"... எமது இனம் படிப்படியாக அழிந்து கொண்டிருக்கும் அபாய நிலைமைக் கண்டும் தக்க தருணம் வரட்டும் மக்களைத் தயார்படுத்திப் போராடுவோம் என்று சும்மா இருந்துவிடுவதா? அல்லது அயல் நாட்டுப் படைகள் வந்து எமக்கு சுதந்திரத்தைப் பெற்றுத் தரும் என்ற கற்பனையில் காலத்தைக் கழிப்பதா? ... தமிழ் இளைஞர்கள் இருக்கிறார்கள் அவர்கள் போராடித் தமிழீழம் பெறுவார்கள், அல்லது இந்தியா இருக்கிறது எமக்கு சுதந்திர தனியரசு பெற்றுத்தரும் என்ற வகையில் நாம் சும்மா இருந்துவிட்டால் எமக்குச் சுதந்திரம் கிடைக்கப் போவதில்லை...... எந்தச் சூழ்நிலையிலும் நாம் போராட்டத்தை நிறுத்திப் போட முடியாது. நாம் தொடர்ந்து போராடியே தீருவோம். போராட்டத்தைத் தொடர்ந்து தீவிரமாக்குவோம் ......... எதிரியை எமது மண்ணிலிருந்து விரட்டியடித்து எமது மக்களின் சுதந்திரத்தை வென்றெடுப்பதாயின் நாம் போராடியே தீருவோம்........ விடுதலைப் போராட்டம் என்பது இரத்தம் சிந்தும் புரட்சிகர அரசியற்பாதை. கல்லும் முள்ளும் நிறைந்த கடினமான பாதை. வியர்வை சிந்தி, கண்ணீர் சிந்தி, இரத்தம் சிந்தி நாம் கொடுத்த துன்பத்தின் பரிசாகப் பெறுவதுதான் சுதந்திரம்......"

"... தமிழீழம் என்றோ ஒரு நாள் உதயமாவது திண்ணம். எமது மக்களாகிய நீங்கள் விடிவு பெறுவது திண்ணம். சமதர்ம சமூகமாக எமது நாடு வளங்கொழிப்பது திண்ணம். இந்த நம்பிக்கையில் ஆன்ம உறுதி தளராது விடுதலைப் பாதையை நோக்கி விரைந்து நடைபோடுவோமாக."

இவ்வாறு திரு. பிரபாகரன் அன்றே கூறிய கருத்துக்கள் இன்று வரையும் இம்மியளவும் பிசகாமல் இலங்கை - இந்திய ஒப்பந்தம் முதற்கொண்டு நடைபெற்று வந்தன. இந்த ஒப்பந்தத்தின் பின்னரும் நிலைமைகள் மாற்றமடையாமல் இருப்பதுடன் எமது சுதந்திரப் போராட்டத்தை இன்னும் பின்னோக்கித் தள்ளிவிட்டன.






இலங்கை - இந்திய ஒப்பந்தம் உருவாக்கப்பட்டபின் ஒப்பந்தம் தொடர்பாக மிகத் தெளிவான நிலைப்பாட்டை விடுதலைப்புலிகள் வெளிப்படுத்தினர். திரு. பிரபாகரன் சுதுமலை மேடையில் வெளிப்படுத்திய பிரகடனத்தில்;

"... இந்தச் சந்தர்ப்பத்தை நாம் அவர்களுக்கு (இலங்கை - இந்திய அரசு) வழங்குவோம். இந்த ஒப்பந்தத்தால் தமிழரின் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு ஏற்படுமென நான் நினைக்கவில்லை..."

"... தமிழீழத் தனியரசே தமிழீழ மக்களின் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வை அளிக்கும் என்பதில் எனக்கு அசையாத நம்பிக்கையுண்டு. தமிழீழ இலட்சியத்திற்காகவே நான் தொடர்ந்து போராடுவேன் என்பதையும் நான் இங்கு திட்டவட்டமாகக் கூறிக்கொள்ள விரும்புகிறேன் ...... எமது எதிரியிடமிருந்து எம்மைப் பாதுகாக்கும் பொறுப்பை இந்திய ராணுவ வீரர்கள் ஏற்றுக்கொள்கிறார்கள். நாம் ஆயுதங்களை அவர்களிடம் கையளிப்பதிலிருந்து ஈழத் தமிழன் ஒவ்வொருவரினதும் உயிருக்கும், பாதுகாப்புக்கும் இந்திய அரசு தான் பொறுப்பாக இருக்கவேண்டும் என்பதை நான் இங்கு இடித்துக் கூற விரும்புகிறேன்...."

"... போராட்ட வடிவங்கள் மாறலாம். ஆனால் எமது போராட்ட இலட்சியம் மாறப் போவதில்லை. இதற்காக நான் தொடர்ந்தும் போராடிக் கொண்டே இருப்பேன்." ▲





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# புலிகள் பற்றி... சர்வதேசஏடுகளின் இன்றைய கருத்துக்கள்





* '...தமிழீழவிடுதலைப்புலிகள் இயக்கம் மிகவும் கட்டுப்பாடானதும், சித்தாந்த தெளிவுடையதுமான அணியாகும்...' - நியூஸ்வீக் -
* '...பிரபாகரனின் புலிப்படை கொரில்லா அணிதான் எல்லாக் கொரில்லா அணிகளையும் விடப் பழமையானதும், பெரியதும், மிகவும் கட்டுப்பாடானதுமாகும். இவ்வணியிலுள்ள இளைஞர்கள் பலர் படித்து முன்னேற் வேண்டுமேனில் பாதிக்கப்பட்டவர்களாவர்...' - டைம் -
* '...தமிழ்மக்கள் 'புலிகளை' ஆக்கிரமிப்புப்படைகளிடமிருந்து தங்களைக் காப்பாற்றுகிறவர்களாகவே காண்கின்றார்கள். இது உலகிலேயே முதன்முதலாக, வரைவிலக்கணத்திற்கு அப்பாற்பட்டு, முற்றிலும் வேறுபட்டிருக்கும் இயக்கமாகும்...' - ஸ்டேட்ஸ்மன் -
* '...ஈழப் போராட்டத்தில், விடுதலைப்புலிகள் மட்டுமே தனித்து நின்று போரிடும் சக்தி என்பதை நிரூபித்துள்ளது...' - சண்டே -
* '...இந்திய ராணுவ நிபுணர்களின் கணிப்புப்படி. தமிழீழ விடுதலைப் புலிகளின் கொரில்லாக்கள் தங்கள் சிறந்த போராட்ட யுக்திகளின் மூலம், குறைந்தளவு ஆயுதங்களை மிகத்திறமையான முறையில் உபயோகிக்கக்கூடியவர்கள் என்பது தெளிவாகின்றது...' - இந்து -
* '...ஈழத்தில் உண்மையான போராட்ட சக்தியாக இருப்பவர்களும், அதில் சிறந்து விளங்குபவர்களும் தமிழீழ விடுதலைப்புலிகளே...' - நியூஸ் டைம் -
* '...வடக்குக்கிழக்குப் பகுதிகளில் தனிநாடு அமைப்பதற்காகப் போராடும் தமிழீழப் புரட்சிக்குழுக்களுக்குள்ளேயே LTTE தான் மிகப்பெரியதும், அதிதீவிரம் வாய்ந்ததுமாகும்...' - ஏசியா வீக் -
* '..LTTE யினர் பொதுமக்களின் ஆதரவைப் பெற்றிருப்பதுடன் நல்ல ஆயுதபலம் உள்ளவர்களாகவும், இலட்சியப்பற்றுள்ளவர்களாகவும் காணப்படுகின்றமையால் அவர்களை வெல்வது சிரமமானதாகும்...' - டெக்கான் ஹெரால்ட் -
* ......

# போராட்டத்துளிகள்

## ஐரிஷ் விடுதலைப் போராட்டமும் தமிழீழ விடுதலைப்போராட்டமும்!

(ஒரு ஒப்பீட்டியலான வரலாற்றுக்கண்ணோட்டம்)



(இவ்வாக்கம் ஆங்கிலேய கொலனித்துவத்தின் முக்கிய அம்சங்களை ஆராய்வதுடன், அது எவ்வாறு இலங்கை-, இந்திய- அரசியல்வாதிகளுக்கூடாக தகுமுறை தகுமுறையாகக் கடத்தப்பட்டு வந்தது என்பதையும், தற்போதைய தமிழீழப் போராட்டம் இதனுடன் எவ்வளவு ஒன்றியிருக்கிறது என்பதையும் மனதிற் கொள்க!)

750 ஆண்டுகளுக்கு மேலான போராட்ட வரலாற்றினைக் கொண்ட அயர்லாந்து விடுதலைப் போராட்டம், பல்லாயிரக்கணக்கான ஐரிஷ் தொண்டர்களின் இரத்தாலும், தியாகத்தாலும் வெற்றிபெற்றது. இராட்சத வலிமையுள்ள ஆங்கில ஏகாதிபத்தியத்தை எதிர்த்து அந்நாள் மக்கள் நடத்திய வீரம் செறிந்த போராட்டத்தின் வளர்ச்சிக் கட்டம் தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் இன்றைய நிலையுடன் ஒப்பிடற்பாலது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

போராட்டம் வளர்ச்சியடையும்

போது காலம் கடத்தல், சில சலுகைகளைக் கொடுத்தல் போன்ற ஏமாற்றுக்களை செய்வதில் ஆங்கில ஆட்சியாளர் மிகவும் கை வந்தவர்கள். 'KILL BY KINDNESS' என்ற 'கொன்சவேட்டிவ்' கட்சியின் சொற்தொடர் இங்கு கவனிக்கத்தக்கது. முதலாளித்துவ வர்க்கம் பற்றிப் பொதுவாகவும், அதில் ஆங்கில ஆட்சியாளர் பற்றிக் குறிப்பாக அவதானிப்போம். "பூர்சுவா" நிலப்பிரபுத்துவ அரசாங்கங்கள் உலகளாவிய அனுபவத்திலிருந்து அவை பொதுமக்களை அடக்கி ஆள்வதற்கு இரு வித வழிகளைக் கையாளுகின்றன. முதலாவது வழி பலாத்காரமாகும். 1ம் நிக்கலஸ், 2ம் நிக்கலஸ் ஆகிய ரஷ்ய மன்னர்கள் கையாண்ட 'அலுகோசு'-நடைமுறைகள் போன்றவற்றை இந்தப் பலாத்கார வழிமூலம் சாதிக்கலாம். அதன் எல்லை வரம்புகள் என்ன என்பதை இரத்தம் தோய்ந்த சரித்திர ஏடுகள் எடுத்துக்காட்டுகின்றன. ஆனால் இன்னொரு வழியும் இருக்கிறது. இதனை ஆங்கில-பிரெஞ்சு-பூர்சுவா வர்க்கங்களே மிகவும் நேர்த்தியாக வளர்த்தெடுத்துள்ளன. இவர்கள் தொடர்ச்சியாக நடைபெற்று வந்த மாபெரும் புரட்சிகள் மூலமும், மக்களின் புரட்சிகர இயக்கங்களின் மூலமும் பாடத்தைக் கற்றுக்கொண்டார்கள். இந்த வழியானது ஏமாற்று வித்தைகளையும், முகஸ்துதிகளையும், அழகான சொற்தொடர்களையும் கையாளுகின்றது. இந்தவழிதான் இலட்சக்கணக்கில் வாக்குறுதிகளை அள்ளிவீசும், ஆனால் கொடுப்பதோ ஓர் சில எலும்புத்துண்டுகள், சில சலுகைகள். அதேவேளை இன்றியமையாதனவற்றை இந்த வர்க்கத்தினர் கைவிடாது தம்வசமே வைத்துக்கொள்வர்.

இங்கு இந்த இரண்டாவது வழிமுறையானது மிகவும் ஆபத்தானது. இது மாயாசால வலைகளை விரித்துப் பல மூடு மந்திரங்களைக் கொண்டிருக்கும். போராட்டத்தின் கூர்மையைத் தணிப்பதிலும், மக்களை ஏமாற்றுவதிலும் இம்முறை கணிசமான அளவு வெற்றிகளை ஈட்டுவது. எனவே பூர்சுவா-வர்க்கங்களின் இந்தக் கபடத்தனமான சூழ்ச்சியை உடைப்பதில், அவற்றைக் குழப்புவதில் கெரில்லாப் போர்முறை ஒரு பலம் பொருந்திய மார்க்கமாக உள்ளது. இந்த வகையில் அயர்லாந்தில் ஆங்கில ஏகாதிபத்தியத்திற்கெதிராக "தான்பிறீன்" எனும் வீரத்தளபதியினால் மேற்கொள்ளப்பட்ட கெரில்லா நடவடிக்கைகள் ஆங்கிலேயரின் சூழ்ச்சிகளையும், சமரசங்களையும் குழப்புவதில் ஒரு பெரும் பங்களிப்பை ஆற்றியுள்ளது. அதாவது 900 ஆண்டுகளின் ஆரம்பம் வரை ஆங்கிலேயர், ஐரிஷ் மிதவாதத் தலைவர்களையும், ஐரிஷ் மக்களையும் தொடர்ந்து காலம் கடத்தல் நடவடிக்கைகள் மூலம் ஏமாற்றிவந்தனர். இந்த நிலையில் விரக்தியுற்ற இளைஞர்கள் ஆயுதம் தாங்கிய போராட்டத்தில் தீவிரமாக ஈடுபடத்தொடங்கினர். அந்த வகையில் 1913ம் ஆண்டு தொடங்கிய ஆயுதம் தாங்கிய இயக்கமே "ஐரிஷ் தொண்டர்படை" (IRISH – VOLUNTEERS) பிற்காலத்தில் இதனை அடியொட்டி, 1919ம் ஆண்டு "ஐரிஷ் குடியரசு இராணுவம்" (IRA) மலர்ந்தது.

---

தொடர்ந்தும் காலம் கடத்தி ஏமாற்றமுடியாது என்ற அளவிற்குப் போராட்டம் வெடித்து வந்ததும் ஆங்கில ஆட்சியாளர்கள் சில விட்டுக்கொடுப்பு ஏமாற்றுக்களைச் செய்ய முன் வந்தனர். அந்தவகையில் தான் 1914ம் ஆண்டு "சுயாட்சிச்சட்டம்" (HOME RULE ACT) நிறைவேற்றப்பட்டது. இம்மசோதா 1886ம் ஆண்டு முதன்முறையாக ஆங்கில ஆட்சியாளர்களினால் பொதுமக்கள் சபையில் சமர்ப்பிக்கப்பட்டபோதும் 1914ம் ஆண்டு வரை அதனை நிறைவேற்றாது காலம் கடத்திவந்தனரென்பது குறிப்பிடத்தக்கது. இந்த ஏமாற்றை ஏற்று ஐரிஷ் மிதவாதத் தலைவர்களும் ஏற்றுக்கொண்டு தொடங்கினர். ஏனெனில் இச்சட்டத்தின்மூலம் அவர்களுக்கு சில எலும்புத்துண்டுகள் கிடைத்தமையே ஆகும். எனவே இந்த ஏமாற்றத்தையும், சமரசத்தையும், மிதவாதத்தையும் உடைத்து நீறுபூத்த நெருப்பாக உள்ளே மறைந்திருக்கும் பிரச்சினையின் நிறைத்தட்டி நெருப்பை வெளிக்காட்ட வேண்டியது ஒரு நியாய கடமையாகும். இந்தவகையில் தான் கெரில்லாத் தலைவன் "தான்பிறீன்" இந்தச் சமரசங்களையும், மாயாஜாலங்களையும் உடைத்து, பிரச்சினையை எரிநிலைக்குக் கொண்டுவர கெரில்லா நடவடிக்கைகள் மூலம் பெரும்பணியாற்றினான்.

உறங்கிக்கிடந்த மக்களைத் தட்டி எழுப்புவதிலும், எதிரியை நெருக்கடிக்குத் தள்ளியதிலும், மிதவாதத் தலைமையை தோலுரித்ததிலும், பிரச்சினையை எரிநிலைக்குக் கொண்டுவந்ததிலும், சர்வதேசரீதியாகப் பிரச்சினையைப் பிரபல்யப்படுத்தியதிலும் ஐரிஷ் போராளிகள் கையாண்ட கெரில்லா நடவடிக்கைகள் மகத்துவமான பங்களிப்பை ஆற்றியுள்ளன.

ஆங்கில ஏகாதிபத்தியத்தின் கால்களை உடைத்து முடமாக்குவதில் கெரில்லா நடவடிக்கைகள் தந்திரோபாய ரீதியில் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தவையாகக் காணப்படுகின்றன.

43-லட்சம் ஐரிஷ் மக்கள் ராட்சதவல்லமையுள்ள ஓர் ஏகாதிபத்தியத்தை எதிர்த்து வென்றது விசித்திரமேயாகும்! சுதந்திர சோதியில் அடிமை இருளும், அறியாமை இருளும் அகன்றன. ஒவ்வொரு நாளும் ஒரு சிறு முன்னேற்றம், பற்பல சீர்திருத்தங்கள். இன்று ஐரிஷ் மக்கள் மற்றைய நாட்டவரைப்போல, தலைநிமிர்ந்து மிடுக்குடன் வாழ்கின்றனர். ▲



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## கல்லறைப் பூக்கள்


கல்லும் கசியும்
கடலும் கொந்தளிக்கும்
காற்றும் கலங்கி நிற்கும்
விண்ணும் விழும்
வீரமும் ஓங்கும்
மண்ணும் போற்றும்
மாண்மிகு மைந்தர்களின்
மாள்விற்காய்.


சொல்லிமாளவில்லை - எனினும்
சோர்ந்து போகவில்லை - நம்
வேங்கைகள்
வென்றனர்
தமிழ் ஈழமெங்கும்
இவர்கள்
ஈழமெங்கும்
நறுமணம் கமழ்கின்ற
மறுமலர்ச்சிப் பூக்கள்
எத்தனை, எத்தனை வர்ணப்பூக்கள்

இவர்கள்
தமிழ் ஈழச் சோலையிலே
தன்னிகரற்ற
என்றென்றும்
காவியங்களாகிய
கல்லறைப் பூக்கள் !

உனதும்
உனைக்கும் முன்னே
உயிர் நீத்த தோழரதும்
லட்சியங்கள் யாவும்
நிச்சயமாய் வெற்றி பெறும்

எனை நீ அழித்தாலும்
மீண்டும் நானே
வருவேன்
வெற்றுயிரல்ல
வேறுருவில்
என் தாகத்துடன்





எங்கள் வானமே இனி உனக்கு இருளே இல்லை

இருண்டிருந்த எங்கள் வானமே இனி உனக்கு இருளே இல்லை
வைகறை மட்டும் எமை அழைத்து வந்த புலிகளே
இதோ உதயங்களையும் காட்டுகின்றீர்கள்
நீங்கள் செய்த தியாகங்கள், திறமைகள் உங்கள்
தீர நெஞ்சங்கள் எந்த வரலாற்றிலுமே இல்லை
உதயத்தை நோக்கிய உங்கள் மரணங்கள்
ஈழத்தின் பூபாளங்களாகவே இசைக்கப்படும்
விடிகின்ற ஈழத்தின் முனகலுக்கு
நீங்கள் அளிகின்ற தியாக வேள்விகள்
விடியலை விரைந்து விரைவு படுத்தும்.

## ஓ வீரர்களே!

உங்கள் தியாகம்
எங்கள்
நீண்ட பயணத்தில்
நிலையான படிகள்




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அந்தப்பலாலில்..... ஒரு சில நினைவுகள்...

| | | |
|---|---|---|
| லெப்டினட் | சங்கர் | 27.11.82. |
| லெப்டினட் | சீலன் | 15.07.83. |
| லெப்டினட் | ஆனந்தன் | |
| லெப்டினட் | செல்லக்கிளி | 23.07.83. |
| கப்டன் | ரஞ்சன் | 13.07.84. |
| லெப்டினட் | பரமதேவா | 22.09.84. |
| கப்டன் | ரவீந்திரன் | 09.01.85. |
| லெப். கேணல் | விக்டர் | 13.10.86. |
| கப்டன் | லிங்கம் | 30.04.86. |
| | கணேஷ் | 05.11.86. |
| லெப். கேணல் | பொன்னம்மான் | 14.02.87 |
| மேஜர் | கேடில்ஸ் | |
| கப்டன் | வாசு | |
| லெப்டினட் | சித்தார்த்தன் | |
| | ராதா | 21.05.87 |
| லெப். கேணல் | திலீபன் | 26.09.87 |
| லெப். கேணல் | குமரப்பா | 05.10.87 |
| லெப். கேணல் | புலேந்திரன் | |
| மேஜர் | அப்துல்லா..... | |
| லெப். கேணல் | சந்தோசம் | ?.10.87 |
| | பிரான்சிஸ் | 01.11.88. |



மரணத்தை நான் மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொள்கிறேன் ஆனால் எனது மக்கள் விடுதலையடைவதை என்னால் பார்க்க முடியாது என்பது தான் எனது ஒரே ஏக்கம்.

- காப்டன் கரும்புலி மில்லர் -

# உதவி

**தமிழீழத்தில் சிறீலங்கா - இந்திய அரசின் பயங்கரவாதம்!**
**தமிழீழ மக்களை பாதுகாக்க விடுதலைப் புலிகளின் தேசிய பாதுகாப்பு நிதிக்கு உதவுங்கள்!**



தேசிய பாதுகாப்பு நிதி
தமிழீழ விடுதலைப் புலிகள்

திரு / திருமதி ........................................
அவர்களிடமிருந்து ரூ. ........................................
பெற்றுக்கொண்டோம்

வே. பிரபாகரன்.
தலைவர்
தமிழீழ விடுதலைப் புலிகள்

ரூ. .................... பெறுபவர்
திகதி :

BANKGIRO

BELØPET GJELDER

BETALERENS NAVN, ADRESSE, POSTNR./STED

UNDERSKRIFT VED BELASTNING

MOTTAKERENS NAVN, ADRESSE, POSTNR./STED
«UTHAYAM»
Boks 4366
5013 NYGÅRDSTANGEN

UNNGÅ FORSINKELSER - SKRIV TYDELIG - BRUK FULLSTENDIG POSTADRESSE

| FRA BANKKONTONR. (11 SIFFER) | KRONER | ØRE | TIL BANKKONTONR. (11 SIFFER) | REFERANSENR |
|---|---|---|---|---|
| H | | | 5235.20.28533 | +5106612769 |



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# விடுதலைப்புலிகளின் தகவல்கள்

## * NORWAY

BERGEN -05-312798

OSLO -02-333797

* AUSTRALIA -03-2327062

* CANADA -416-9215564 ; 416-9240482
514-7330021 ; 514-2551214

* DENMARK -07-840225 ; 07-402154

* FRANCE -01-42260506 (7 lines); -01 46364949

* NEDERLAND -070-805337

* SWITZERLAND -01-556302 ; 021-334770
031-580078 ; 071-226180

* U.K. -01-4702090 ; 01-4750543
01-8370808 ; 01-8330949

* U.S.A. -718-7617217 ; 201-4812221
312-5881039

* W.-GERMANY -030-3966087 : 02101-120395
0228-467206 ; 069-4691367
02306-57403 ; 0421-425641
07031-228983 ; 06897-64970
05321-29216








தமிழீழ விடுதலைப் புலிகள்
LIBERATION TIGERS OF THAMIL EALAM

25th April 1978

TO WHOM IT MAY CONCERN

The founder name of the organisation Tamil NEW TIGERS (T.N.T.) was changed on 5-5-76 and the new name is LIBERATION TIGERS OF TAMIL EALAM. We claim responsibility for the following deaths.

1. Mr. Alfred Duraiappah (Mayor for Jaffna, S.L.F.P. Organiser Northern region.



VIRAKESARI
'புலி'கள் தடைச் சட்டமூலம் நிறைவேறியது!

தடைசெய்யப்பட்ட இயக்க
ஆதரவாளர் சொத்துக்கள் ப
7 ஆண்டுகள் சிறைத்தண்டனையும்

துப்பாக்கிச் சூட்டில் ஒரு கான்ஸ்டபிள் பலி
மாவிட்டபுரத்தில் சம்பவம்

MURASOLI (INDIA DAILY) 30.5.1978
விடுதலைப் புலிகள் பற்றிய செய்திக்கு தடை!

கிளிநொச்சி போராளிகளின் கட்டுப்பாட்டில் உள்ளது

தமிழீழ விடுதலைப் புலிகள்
...RATION TIGERS OF THAMIL EALAM
சமூக விரோதிகளை அழிப்போம்!

ஐ.தே.க. ஆதரவாளர்கள் மூவர் சுட்டுக் கொலை! பருத்தித்துறை, வல்வை, சாவகச்சேரியில் சம்பவம்!

12 வருடச் சரித்திரம்

50 killed in LTTE-TELO

LTTE, TELO seek mutual liquidation

100 பேர் சாவு!

Faction fighting claims 100 lives in Lanka

TELO leader, two aides shot dead

Conflicting claims by TELO, LTTE

TELO-LTTE clash will

Tigers' bid to take over Eelam struggle

லெப்டினன்ட் கேர்ணல் விக்டருக்கு 2 இலட்சம் மக்கள் வீர அஞ்சலி!

வெடிவிபத்தில் வீரமரணமடைந்த விடுதலைப் புலிகளுக்கு அஞ்சலி!

பிரபாகரனைக் கொல்லச் சதி! 'றோ' மீது திலீபன் குற்றச்சாட்டு!

இந்திய நலன்கருதிய ஒப்பந்தத்தை பிரபா ஏற்கவில்லை
29-08-87 காசி ஆனந்தன் பேச்சு

"இந்திய-இலங்கை சமாதான ஒப்பந்தம் ஈழவிடுதலைப் போராட்டத்தின் வரலாற்றை மாற்றிவிட்டது

வன்முறை தவிர்க்குமாறு மாத்தயா கோரிக்கை

திருமலையில் இந்தியப் படை எதிரே
இலங்கை இராணுவத்தினரால் 7 தமிழர் சுட்டுக் கொலை: 15 பேர் படுகாயம்!

இந்திய இராணுவ அதிகாரி துவக்குமுனை யில் பிடிபட்டிருந்தார்

இந்தியப் படை முகாம்களுக்கு வெளியே அமைதியான மறியல் மரணத்துறுவாயில் திலீபன்!

ஒப்பந்தத்தின் பின்னரும்
தமிழ் அகதிகள் பழைய இடத்திற்கு செல்ல முடியாத நிலை

"பயங்கரமாய் ஏமாற்றி விட்டார் ராஜீவ்!"